# 3

# "நீங்கள் பரிசுத்தமாக்கப்பட்டவர்"

*உலகத்தை விட்டு வெளியேறி தேவனுடைய பிள்ளையாக அடையாளப்படுத்தப்படுவதைத் தெரிந்து கொள்வதன் விளைவு கிறிஸ்தவனாக மாறுவது. கிறிஸ்தவம் என்பது "ஒளியிலே நடப்பதும்" (1 யோவான் 1:6-9), "தேவனைப் பின்பற்றுவதுமான" (எபேசியர் 5:1) ஒரு வாழ்க்கை முறைக்கு மாறுவது. தேவனைப் பற்றிப் போக ஒப்புக்கொடுத்தல் தேவைப்படுகிறது. அது ஒரு குழந்தை பெரியவனாக வளருவது போல வளர்ச்சியும் முதிர்ச்சியும் இடம் பெறும் ஒரு நடைமுறையே (எபேசியர் 4:15; 2 பேதுரு 3:18). ஒரு புதிய கிறிஸ்தவன் அவனுடைய மனதிலும், தீர்மானிப்பதிலும், செயல்பாடுகளிலும் தேவனுடைய விருப்பத்துக்கேற்ற மறுரூபமாவதிலும் வளர்ந்தேறுகிறான் (காண்க ரோமர் 12:1, 2). அவர் திடீரென வளர்ச்சியைப் பெறாவிட்டாலும், அவன் தேவனை ஒரு வளர்ந்த பின்பற்றுபவனாகத் தனது வாழ்விலும் நினைவிலும் துவங்குகிறான் (1 கொரிந்தியர் 14:20). ஏன் இந்த உடனடி மாற்றம் தேவைப்படுகிறது? ஒரு புதிய கிறிஸ்தவன் ஏன் உடனடியாக சில செயல்களை நிறுத்தி தேவனுடைய சித்தத்துக்கு ஏற்ப தனது சிந்தனையில் மறுரூபமாக வேண்டும்? காரணம் மிகவும் எளிமையானது; அவன் "பரிசுத்த மாக்கப்பட்டவன்" என்பதால்.*

*"பரிசுத்தமாக்கப்படுதல்" என்பது ஒரு முதன்மைத் திருமறை கருத்தைக் குறிக்கும் பதம். அது ஒரு பொருளுடனோ, ஒரு இடத்துடனோ, ஒரு நபருடனோ சம்பந்தப்படுத்தப்பட்டு சர்வ வல்லமையுள்ள தேவனுடைய பயன்பாட்டிற்காக பிரித்தெடுக்கும் செயல். மோசேயின் பிரமாணத்தின் கீழ் ஒரு பொருள் ஒரு முறை "பரிசுத்தமாக்கப்பட்டு விட்டால்" அது வேறு பொதுவான பயன்பாட்டிற்காக ஒருபோதும் பயன்படுத்தப்படக் கூடாது. லேவியராகமம் 10:1-3ல் இரண்டு ஆசாரியர்கள் "பிரித்து எடுக்கப்பட்ட" தன்மையை மதியாதபடியால் அவர்கள் அழிக்கப்பட்டார்கள். தேவன் தம்முடைய மக்கள் தங்களின் பரிசுத்தமாக்கப்பட்ட புதிய வாழ்க்கைக்கு தங்களை தாங்களே நடத்திக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.*

*நீங்கள் இப்பொழுது ஒரு கிறிஸ்தவன், நீங்கள் "பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறீர்கள்." இது பயமுண்டாக்குவது போல் தெரிகிறதா? பரிசுத்தமாக்கப்பட்ட தன்மை இஸ்ரவேலரின் ஒரு செயலில் விவரிக்கப்பட்டுள்ளது. தாங்கள் சொந்தமாக்கிக் கொண்டுள்ள ஒவ்வொன்றிலிருந்தும் தேவனுக்கு பத்தில் ஒரு பங்கை கொடுக்கவேண்டுமென கேட்கப்பட்டார்கள். தங்களுடைய ஆடுகளில் பத்தில் ஒன்றை அவருக்கு பலியிடுவது யூதர்களுக்கு வழக்கமாயிருந்தது. இது அவரவர் மன விருப்பத்தின்படி நிறைவேற்றப்பட்டது. ஆட்டுக்குட்டிகள் (தாய்) ஆடுகளிலிருந்து பிரிக்கப்பட்டு*

*ஒரே ஒரு குறுகிய வாசற்கதவு கொண்ட தொழுவத்தில் வைக்கப்படும். அந்த குறுகிய வாசற்கதவுக்கு வெளியே தாய் ஆடுகள் கட்டப்பட்டிருக்க வேண்டும். ஒரு சைகையைத் தொடர்ந்து, வாசற்கதவு திறக்கப்படும், ஆட்டுக்குட்டிகள் தங்கள் தாயுடன் சேர்வதற்காக வேகமாக வெளியே வரும். வாசலருகே ஒரு மனிதனை நிறுத்தி ஒரு கோலும் "நிலக்கீலும்" கையில் கொடுத்து வைக்க வேண்டும். ஒவ்வொரு பத்தாவது ஆட்டுக்குட்டியும் கடந்து போகும் போது, அவர் அந்த குச்சியை குறிப்பிட்ட நிறமுள்ள நிலக்கீலில் தோய்த்து ஆட்டுக் குட்டியின் மேல் அடையாளமிட வேண்டும். ஒவ்வொரு பத்தாவது ஆட்டுக்குட்டியின் மேலும் தொட்டுவைத்ததை அவர் உறுதிப்படுத்திக் கொண்டார் (காண்க லேவியராகமம் 27:32) ஒவ்வொரு ஆட்டுக் குட்டியின் மேல் அடையாளமிடும் போதும் அந்த மனிதன், "இது பரிசுத்தமானது" என்று சொல்லுவான். தீர்க்கதரிசி எசேக்கியேல் இந்த புராதன கால வழக்கத்தை பயன்படுத்தி பரிசுத்தமாக்குதலைப் போதிக்கிறார்! "நான் உங்களை கோலின் கீழ் செல்லும்படி செய்து, உங்களை உடன்படிக்கையின் கட்டுக்குட்படுத்தி" (எசேக்கியேல் 20:37). தீர்க்கதரிசியின் வார்த்தைகள் தெளிவாயிருந்தன. பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணிக் கொண்டார்கள்! (காண்க எரேமியா 33:13.)*

*பரிசுத்தமாக்கப்படுதல் என்பது பலதில் ஒன்றை தெரிவு செய்து கொள்ளுவதல்ல. கிறிஸ்தவராகிய நீங்கள், தேவனால் அடையாளமிடப்பட்டு ஒப்புவமையற்ற அவரது சொத்து நீங்கள். கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்டவர்கள் நீங்கள், தேவனுக்கு உரியவர்கள் (தீத்து 2:14). ஆதலால், நீங்கள் பரிசுத்தமாக்கப்பட்ட வாழ்க்கையை வாழ வேண்டும். எபேசியர் புத்தகத்தின் இரண்டாம் பாகத்தில், பரிசுத்தமாக்கப்பட்ட வாழ்க்கையை பவுல் விளக்கமாக பேசுகிறார். அதிகாரங்கள் 4 லிருந்து 6 வரை, கிறிஸ்தவர்கள் குறிப்பாக சில காரியங்களை செய்யவும் வேறு சில காரியங்களை தவிர்க்கவும் கட்டளையிடப்படுகின்றனர். அதிகாரம் 4 லிருந்து அடுத்த மூன்று பாடங்களில், எப்படி ஒரு கிறிஸ்தவன் தெரிவு செய்யவும், கர்த்தருடைய சபையில் ஊழியம் செய்யவும், புதிய வாழ்வை எப்படி அனுபவிக்கிறார் என்றும் தமது போதனையில் பவுல் காட்டுவதை நாம் பார்ப்போம். தற்போதைய பாடம் பரிசுத்தமாக்கப்படுதல் என்பது கிறிஸ்தவ வாழ்க்கையின் மிகவும் முக்கியமான பகுதி என விவரிக்கிறது.*

## பரிசுத்தமாக்கப்படுதலின் பொருள்

*"பரிசுத்தமாக்கப்படுதல்" எனும் பதம் பொதுவான வழக்கச் சொல்லில் பேசப்படுவதல்ல, அது திருமறையில் விவரித்து விளக்கமளிக்கப்பட்டுள்ளது. அடிப்படையில், "பரிசுத்தமாக்குதல்" என்றால் "விசேஷ நோக்கத்திற்காக பிரித்தெடுக்கப்படுதல்." இது "பரிசுத்தம்" எனும் வார்த்தையிலிருந்து வந்ததும் அதே பொருள் கொண்டதுமான பதம் என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பரிசுத்தமான ஒரு பொருளோ, ஒரு இடமோ, அது தனிச்சிறப்பு வாய்ந்த தரமுள்ளது. சர்வ வல்லமையுள்ள தேவனின் சொத்து அப்படிப்பட்டது. "பரிசுத்தம்" எனும் பதத்தை தேவனோடு நாம் சம்பந்தப்படுத்துகிறோம். ஒரு பொருளோ அல்லது ஒரு இடமோ பரிசுத்தமானது என்னும் போது, அது விசேஷமானதாக இருக்கிறது. ஒரு நபர் கிறிஸ்தவனாகும் போது, அவன் தேவனுடைய விசேஷித்த சொத்தாகிறான் (தீத்து 2:11-14). கிறிஸ்தவன்*

இப்பொழுது தேவனுக்குச் சொந்தமானவன் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

2 இராஜாக்கள் 23ல் இராஜவாகிய யோசியா பரிசுத்தமாக்கப்படுதலை விளக்கிக் காட்டுகிறார். இந்த நல்ல ராஜா தேவனுடைய வார்த்தைகளுக்கு தான் கீழ்ப்படிந்து நடக்க விருப்பமுள்ளவனாயிருந்தான் (வசனம் 2). தேவனுடைய சத்தியத்தைக் கேட்டபின், "ராஜா, தூண் அருகே நின்று, கர்த்தரைப் பின்பற்றி நடக்கவும் அவருடைய கற்பனைகளையும் அவருடைய சாட்சிகளையும் அவருடைய கட்டளைகளையும் முழுஇருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் கைக் கொள்ளவும், அந்த புஸ்தகத்தில் எழுதியிருக்கிற அந்த உடன்படிக்கையின் வார்த்தைகளை நிறைவேற்றவும் கர்த்தருடைய சந்நிதியில் உடன்படிக்கை பண்ணினான்; ஜனங்கள் எல்லாரும் உடன்படிக்கைக்கு உட்பட்டார்கள்" (வசனம் 3). ராஜாவாகிய யோசியா தேவனுடைய வார்த்தையைப் பின்பற்றி பரிசுத்தமாக்கப்பட்ட வாழ்க்கையை வாழத்தீர்மானித்தான். அவன் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய ஆவலுள்ளவனாய் இருந்தான். ராஜா தயங்கவோ, கேட்கப்பட்ட காரியங்களை திருத்தி அமைக்கவோ செய்யவில்லை, அல்லது கட்டகளைகளைக் குறித்து தர்க்கம் பண்ணவுமில்லை. அவர் தேவனுடைய கட்டளைகளை "முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும்" கைக்கொள்வதாகக் குறிப்பிட்டார். என்னே ஒரு ஊக்கமூட்டும் முன்னுதாரணம்! இப்பொழுது நீங்கள் ஒரு கிறிஸ்தவர், பரிசுத்தமாக்கப்பட்ட வாழ்க்கையை வாழ இவ்விதமான கண்ணோட்டத்தை நீங்கள் கொண்டிருக்க வேண்டும். அந்த நோக்கத்திற்காக முழு இருதயத்தையும் முழு ஆத்துமாவையும் ஒப்புக் கொடுக்க வேண்டும்.

பவுல் கொரிந்து பட்டணத்திலுள்ள கிறிஸ்தவர்களுக்கு எழுதி பரிசுத்தமாக்கப்படுதலின் கருத்தை விவரித்துக் காண்பித்தார். அவர் அந்த சபையாரை "பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும் பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற" என்று அழைத்து எழுத ஆரம்பித்தார் (1 கொரிந்தியர் 1:2). ஒருவன் கிறிஸ்தவனாகும் போது பரிசுத்தவானாயிருக்கிறான் என்பதை இது வெளிப்படுத்துகிறது. ஏன் எல்லா கிறிஸ்தவர்களும் பரிசுத்தவான்களாயிருக்கிறார்கள்? ஒருவர் கிறிஸ்தவனாகும்போது, அவர் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே கிரயத்துக்குக் கொள்ளப் பட்டு தேவனுக்கு சொந்தமாகிறார். அவர் "பிரித்தெடுக்கப்பட்டவர்" அல்லது தேவனுடைய பயன்பாட்டிற்காக "பரிசுத்தமாக்கப்பட்டவர்." பரிசுத்தவான் என்பவர் ஏதோ அசாதாரணமான ஆவிக்குரிய வாழ்க்கை வாழ்ந்து உலகத்தை விட்டுப் பிரிந்தவரோ அல்லது பெரிய மனவெழுச்சி உண்டாக்கின ஒரு நபரோ அல்ல. கொரிந்தியர் "அழைப்பினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்கள்." அவர்கள் "அழைக்கப்பட்டதன்" விளைவாக, அவர்கள் சுவிசேஷப் பிரசங்கத்தைக் கேட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டு முழுக்கப் பட்டவர்கள். (ரோமர் 10:9-16ஐ காண்க.) பின்னதாக பவுல், இந்தக் கிறிஸ்தவர்கள் "கழுவப்பட்டவர்கள்," "பரிசுத்தமாக்கப்பட்டவர்கள்," "நீதிமான்களாக்கப்பட்டவர்கள்," என்று எழுதினார் (1 கொரிந்தியர் 6:11). ஒருவர் தேவனுக்கு முன்பாக "நீதிமானாக்கப்படும்போது" இரட்சிக்கப்படுகிறார் (ரோமர் 5:1, 9; 8:30). கொரிந்தியர்கள் "கழுவப்படும்" வரை (அவர்களுடைய பாவமன்னிப்பிற்கென்று முழுக்கப்படும்வரை, அல்லது ஞானஸ்நானம் பெறும்வரை) "நீதிமான்களாக்கப்

படவில்லை.'' முழுக்கப்படும்போது, அவர்கள் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் இடம் பெறுகிறார்கள் (கொலோசெயர் 1:13). அதே நேரத்தில் தான், அவர்கள் தேவனுடைய பயன்பாட்டிற்காக "பிரித்தெடுக்கப் படுகிறார்கள்." உங்களுடைய முழுக்குதல் நிகழ்ந்தபோது, அதேபோல கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப் பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள். முழுக்குதலின்போது பரிசுத்த மாக்கப்படுதல் நிகழ்கிறது என்று வசனங்கள் போதிக்கின்றன.

எபேசியர் 5:26 இன்னொரு பரிசுத்தமாக்கப் படுதலுக்குரிய கருத்து விளக்கம் கொடுக்கப் பட்டுள்ளது. இயேசு கிறிஸ்து சபையை (தமது மணவாட்டியை) பரிசுத்தமாக்கியிருக்கிறார். கர்த்தருடைய சபையில் இருப்பவர்கள் மட்டுமே தேவனுக்கென்று பரிசுத்தமாக்கப்பட்டவர்கள், ஏனெனில் கிறிஸ்து தமது சபையை மட்டுமே பரிசுத்தமாக்கினார். பொது சமுதாயக் குழுக்களும் மார்க்க (சமய) நிறுவனங்களும் நற்கிரியை செய்யக்கூடும் அதினால் நல்ல பெயரும் பெற்றிருக்கலாம், *ஆகிலும்* அவை பரிசுத்தப்படுத்த இயலாது. ஒருவர் பரிசுத்தமாக்கப்பட (இரட்சிக்கப்பட) விரும்பினால், அவர் கர்த்தருடைய சபையில் இருக்க வேண்டும். *ஹாஜியாஸோ* எனும் கிரேக்கப் பதம் பரிசுத்தமாக்கப் பட்டவர் அல்லது தூய்மையாக்கப் பட்டவர் என்று சுட்டிக் காட்டுகிறது. நீங்கள் கிறிஸ்தவரானபோது, கர்த்தருடைய சபைக்குள்ளாக முழுக்கப்பட்டீர்கள் (அவரது சபை; கொலோசெயர் 1:18) அந்த நேரத்தில் நீங்கள் இரட்சிக்கப்பட்டதால் பரிசுத்தமாக்கப்பட்டீர்கள்.

ஒருவர் கிறிஸ்தவனாகும் போது, தேவனுடைய பயன்பாட்டிற் கென்று பரிசுத்தமாக்கப் படுகிறார். அவர் உலகத்தாரைப் போல வாழ முடியாது என்று உணருகிறார். அவரது மனந்திரும்பிய எண்ணம் அவரை தேவனுடைய வழிகாட்டலுக்கு இட்டுச் செல்கிறது. தேவனுடைய போதனைகளைப் பின்பற்றுவதில், அவர் பரிசுத்தமாக்கப்பட்ட வாழ்க்கையை வாழ்கிறார், ஏனெனில் அவர் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்தவர், பாவமன்னிப்பிற்காக முழுக்கு பெற்றவர், கர்த்தருடைய சபையிலே நாட்டப்பட்டவர்.

## அது வெளிக் கொணரப் படும் விதம்

பரிசுத்தமாக்கப்படுதல் என்பது நாம் "பரிசுத்தவான்களாய்'' வாழ்வதன் மூலம் வெளிப்படுத்துகிறோம். துரதிஷ்ட வசமாக பரிசுத்தவானாய் தாங்கள் தங்கள் புலன் உணர்வை அடக்கி வாழ்ந்தால் போதும் என்கிற எண்ணம் திருமறை கூறும் கருத்தை புரிந்து கொள்ள தடை செய்கிறது. பரிசுத்தவான் தான் கிறிஸ்தவனானதால் பரிசுத்தமான வாழ்க்கையை வாழ்கிறான் என்று வேத வசனம் சொல்லுகிறது. பரிசுத்தமாய் வாழ்வது ஒரு கொடுக்கப்பட்ட உரிமைக் கட்டளை (1 பேதுரு 1:13-16). பரிசுத்த வாழ்க்கை தேவனுக்கு ஒப்புக் கொடுத்த வாழ்க்கை. இந்த வாழ்க்கை நெறியில் கிறிஸ்தவன் தன்னுடைய ஒவ்வொரு சொல்லாலும் செயலாலும் தேவனுக்கு மகிமையைக் கொண்டு வரவே தேடுகிறான். பரிசுத்தமாக்கப்பட்ட வாழ்க்கையை வாழ்வது என்பதன் பொருள் தேவனுக்கு ஒரு கிறிஸ்தவன் ஒப்புக்கொடுத்து தேவனுடைய வழிகாட்டுதலின்படி வாழ முயற்சிப்பதுதான்.

பரிசுத்தமாக்கப்பட்ட வாழ்க்கை 1 யோவான் 1:6-9ல் தேவனுடைய வசனம் வெளிப்படுத்தும் சத்தியத்தின் "ஒளியிலே நடப்பதற்காக" ஒப்புக்கொடுக்கப்பட்ட வாழ்க்கை என்று விவரிக்கிறது. பரிசுத்தவான் பாவம் செய்யும்போது, அவன் தன்

*பாவத்தை அறிக்கையிட்டால் - அவன் பாவத்திற்கு மன்னிப்பைப் பெறுவது சாத்தியம்! எல்லாருமே பாவஞ் செய்கிறவர்கள்தான். ஆகிலும் கிறிஸ்தவன் பாவஞ்செய்வானானால் பாவத்திற்கு மனந்திரும்பி அறிக்கை செய்யும்போது தேவன் அவனை மன்னிக்கிறார். பாவத்திற்காகத் துக்கப்பட்டு பாவம் செய்வதை நிறுத்துவதை பாவமன்னிப்பு எதிர்பார்க்கிறது. கிறிஸ்தவன் புரிந்துகொள்ள வேண்டிய முக்கியமான சொற்றொடர் "பாவஞ் செய்தல்" (1 யோவான் 3:8, 9). கிறிஸ்தவன் தான் கிறிஸ்துவினிடத்தில் வருவதற்கு முன் செய்துகொண்டிருந்த பாவத்தில் தொடர்ந்து நிலைத்திருக்கமாட்டான் என்று கிரேக்க வினைச் சொல் குறிப்பிடுகிறது. மனமாற்றத்துக்கு முன்பு, ஒரு நபர் பாவத்தைக் குறித்து ஒரு அக்கறையற்ற எண்ணமுடைய வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்திருப்பார். மனமாற்றப்பட்ட பின்பு, பாவத்தைக் குறித்த தனது அக்கறையற்ற எண்ணத்தை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்பதை உணர்ந்து கொள்கிறார். பாவமில்லாமல் வாழ்வது கூடாத காரியமானாலும் (1 யோவான் 1:10), கிறிஸ்தவன் பாவத்தைக் குறித்து வித்தியாசப்பட்ட எண்ணமுடையவனாய் வாழ்வது முக்கியமானது. 1 யோவான் 3:1-10ல் இந்த காட்சியின் முரண்பாடு விளக்கப்படுத்தப் பட்டுள்ளது. கிறிஸ்தவ வாழ்க்கை தூய்மையாக்கப்பட ஒப்புக்கொடுக்கப் பட்டிருக்கையில், உலகத்தில் இருப்பவர்கள் பாவத்தைச் செய்ய ஒப்புக் கொடுத்திருக்கிறார்கள்.*

*பரிசுத்தமாக்கப்பட்டதன் நடைமுறை விளைவு என்பது எல்லாம் மாறுகிறது என்பதே! (காண்க 2 கொரிந்தியர் 5:17.) கிறிஸ்தவன் தன்னுடைய உள்ளான எண்ணத்தை பிரித்தெடுத்து தேவனுடைய சேவைக்காக மனதாயிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். தங்களுடைய உள்ளான எண்ணத்தை சுத்திகரிக்காதவர்கள் பரிசுத்தவானாக வாழத் தவறுகிறார்கள் (காண்க மத்தேயு 23:26-28; மாற்கு 7:21; ரோமர் 2:1-5). பரிசுத்தமாக்கப்பட்ட கிறிஸ்தவன் ஒரு மாய்மாலக்காரனாயிராமல், தனது வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் தேவனை மகிமைப்படுத்துவதை நேர்மையுடன் செயல்படுத்துகிறவனாய் இருக்கிறான். கிறிஸ்தவர்கள் பழங்கால இஸ்ரவேல் ஜனங்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றவர்களைப் போன்றவர்கள். இஸ்ரவேலர் எகிப்திலிருந்து விடுதலையாகி வெளியேறியது போது, அவர்கள் எதையும் பின் வைத்து வெளியில் வரவில்லை (யாத்திராகமம் 10:24, 26); அவர்கள் எகிப்திற்கு திரும்பிச் செல்லும் தெரிவுடன் தங்களை ஒப்புக்கொடுத்து வரவில்லை. நாம் பாவத்தின் அடிமைத் தனத்திலிருந்து வெளியேறும்போது, நம்மில் ஒரு பகுதியை உலகத்திற்கென பின்வைத்து வரவில்லை!*

*இப்பொழுது நீங்கள் கிறிஸ்தவர்களாக மாறியிருக்கிறீர்கள் என்பதால் நீங்கள் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறீர்கள். இதினால் நீங்கள் பூரணப் பட்டவர்கள் என்று அர்த்தப்படுவதில்லை, ஆகிலும் நீங்கள் தேவனுடைய சித்தத்தை உங்களுடைய திராணிக்கு இயன்றவரை பின்பற்றி வாழ்கிறீர்கள். இன்னும் அதிகமாய் கிறிஸ்துவைப் போல் மாற வேண்டும் எனும் முயற்சியில் உங்களை மாற்றியமைக்க ஏதுவான வாழ்க்கையின் எந்த பகுதியையும் மாற்றிக் கொள்ள ஆர்வம் காட்டுகிறீர்கள் என்பதை அது காட்டுகிறது. கொலோசெயர் 3:10 பரிசுத்தமாக்கப்படுதலை புதிதாக்கப்படுதலாகக் காட்டுகிறது. இதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்கப் பதம் ஒரு கட்டுமானத்தில், பழைய பாகங்கள் எல்லாம் அப்புறப்படுத்தப்பட்டு, பிரிதொரு பொருளால் அல்லது "புதிய" பொருளால் அந்த இடம் புதுப்பிக்கப்படுகிறது. கிறிஸ்தவராகிய*

*நீங்களும் இந்த புனரமைப்பு செயலாக்கத்தில் இருக்கிறீர்கள். நாளுக்கு நாள், தேவன் உங்களிடத்தில் வித்தியாசப்பட்ட வார்த்தைகள், செயல்கள், அல்லது எண்ணங்களில் என்னத்தை எதிர்பார்க்கிறாரென்று நீங்கள் அறிந்து கொள்ளுகிறீர்கள். நீங்கள் தேவனுடைய தனி பயன்பாட்டிற்காக பிரித்தெடுக்கப் பட்டவர் என்பதை அறிந்திருக்கிறபடியால் நீங்கள் அப்படிச் செய்ய விருப்பமுள்ளவராயிருக்கிறீர்கள்.*

## அதன் முக்கியத்துவம்

*பரிசுத்தமாக்கப்படுவது கிறிஸ்தவனுக்கு முக்கியமானது. பரிசுத்தமானவைகளை தவறான வழியில் பயன்படுத்துவோர் மீது தேவனுடைய கோபாக்கினை பற்றியெறிந்தது என்று பழைய ஏற்பாடு விளக்கப் படுத்துகிறது (லேவியராகமம் 10:10; எசேக்கியேல் 22:26). அதே போல புதிய ஏற்பாட்டிலும் தெய்வீக கோபாக்கினை காணப்படுகிறது. கொரிந்து பரிசுத்தவான்கள் தங்களுடைய பரிசுத்தமாக்குதலை மாசு படுத்தினார்கள். உலகத்தின் சோதனைகள் அவர்களுடைய ஒப்புக்கொடுத்தலின் தூய்மையை மாசுபடுத்த அனுமதித்தார்கள்.*[1]

*தேவனுடைய பரிசுத்தவானாக வாழ்வது ஒருவரின் தெரிவு செய்து கொள்ளும் ஒரு பகுதியல்ல (1 பேதுரு 1:13-16); பரிசுத்தமாக்கப்பட்ட வாழ்க்கையை வாழ தவறுவோர் நித்திய அழிவை சந்திப்பார்கள் (பிலிப்பியர் 3:17-19). நீங்கள் இப்பொழுது ஒரு கிறிஸ்தவர் என்பதால், தேவன் உங்களுடைய பரலோகப் பிதாவாயிருக்கிறார். தேவனுடைய பரிசுத்தக் குடும்பத்தின் தன்மையை நீங்கள் பிரதிபலிக்கக் கூடியவர்கள். உங்களுடைய பரிசுத்தமாக்கப்படுதலுக்கு நீங்கள் உங்கள் ஒப்புக்கொடுத்துள்ளமையால் இதைச் செய்கிறீர்கள்.*

## நிறைவுறும் சிந்தனைகள்

*ஒரு கிறிஸ்தவனாக மாறுவது இந்த உலகத்தில் மாபெரும் ஆசீர்வாதம். கிறிஸ்துவைப் பின்பற்றுவது என்பது பாவத்தின் துன்பியல்புகளையும் தேவனுடைய அன்பின் கிருபையையும் ஒருவர் புரிந்து கொள்வதைப் பொறுத்தே அமைந்திருக்கிறது. கிறிஸ்தவனாயிருப்பது என்பது கிறிஸ்துவின் "நுகத்தடியில்" பிணைக்கப்பட ஒப்புக் கொண்டு பரிசுத்தவானாய் வாழ்வது என்று பொருள் (மத்தேயு 11:29).*

*முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட இரட்சிப்பிற்காக சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்தார்கள். இரட்சிக்கப்பட விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று, பரிசுத்தமாக்கப்படத் தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். நடபடிகள் 5:29-42ல், அவர்களுடைய ஒப்புக்கொடுத்தல் எப்படி நடைமுறைபடுத்தப்பட்டது என்பதை நாம் காணுகிறோம். தேவனுடைய கட்டளைகளை பின்பற்றுவதற்காக அவர்கள் செய்த ஒப்புக்கொடுத்தல் வெளிப்படையாய்க் காணப்பட்டது. அவர்களுடைய வாழ்க்கையில், பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் பரிசுத்தவானாக வாழ வேண்டுமென்ற புரிந்து கொள்ளுதலை கொண்டிருந்தார்கள் என்பதை நாம் காணுகிறோம். பரிசுத்தமாக்கப்பட்ட வாழ்க்கைமுறை கிறிஸ்தவர்களின் இருதயத்தில் சந்தோஷத்தையும் ஆத்துமாவில் சமாதானத்தையும் கொண்டு வருவதை அவர்கள் அறிந்திருந்தார்கள். அவர்களுடைய பக்தியின் உணர்வுகளை*

*நடைமுறைப் படுத்துவது எவ்வளவு கடினமானதாயிருந்த போதிலும். அவர்களுடைய பரிசுத்தமாக்கப்படுதல் தைரியத்தால் நிரப்பி உற்சாகத்துடனே ஊழியம் செய்யும் உந்துதலைக் கொடுத்தது. இன்று இதைத்தான் சரியாக தேவன் தம்முடைய பரிசுத்தவான்களிடத்தில் எதிர்பார்க்கிறார்.*

*தேவன் கிறிஸ்தவர்கள் பரிசுத்தமாக்கப்பட்ட வாழ்வை வாழ வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். இயேசு கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கையின் இரட்சிப்பிற்காக தேவன் நம்மை அழைத்திருக்கிறார். ஆட்டுக்குட்டிகள் பரிசுத்தமானவை என கணக்கிடப் பட்டது போலவே தேவன் மறுபடியும் தமது ஜனங்களை கணக்கெடுக்கும் போது, புதிய உடன்படிக்கை அமலுக்கு வருவதைக் குறித்து எரேமியா முன்னுரைத்தார் (எரேமியா 33:1-13).*

*தேவன் பரிசுத்தமாக்கப்படுதலின் உடன்படிக்கையை பழைய இஸ்ரவேலருக்கு ஸ்தாபிதம் பண்ணினது இன்று நமக்கு அவர் அளிக்கும் உடன்படிக்கையை உதாரணமளிக்கிறது. பரலோகத்தின் சர்வ வல்லமையுள்ள தேவனே நமது பிதாவாக இருப்பதால் தேவனுடைய அழைப்புக்கு செவி கொடுத்து உற்சாகத்தோடு பரிசுத்தமாக்கப்பட்ட வாழ்க்கையை வாழ்வதன் மூலம் பதிலளிப்போம்! "இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையை கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்கு சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள்" (யாத்திராகமம் 19:5, 6) என்று அன்று இஸ்ரவேலுக்கு சொல்லப் பட்டுள்ளது. கிறிஸ்துவின் வருகை இந்த தீர்க்கதரிசன வார்த்தைகளை நிறைவேற்றியது. இப்பொழுது கிறிஸ்தவர்களுக்கு சொல்லப்படுகிறது, "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வர வழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப் பட்ட சந்ததியாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" (1 பேதுரு 2:9).*

---

குறிப்பு

[1] *1 கொரிந்தியர் 1:10-13; 3:1-3, 16-19; 4:6, 14; 5:1-13; 6:13-19; 8:11, 12; 10:10, 21; 11:17-20; 12:25, ஐ வாசிக்கவும்.*